தினமணி

**விவசாய தொலைபேசி தகவல் சேவை மையங்கள்: மேலும் பிரபலப்படுத்த பிரசார இயக்கம்**

First Published : 18 Nov 2010 01:23:27 AM IST

புதுதில்லி, நவ.17: கிஸôன் கால் சென்டர் என்ற பெயரில் இயங்கும் விவசாய தொலைபேசி தகவல் சேவை மையங்களை பெண்கள் மத்தியில் மேலும் பிரபலப்படுத்த மத்திய அரசு பிரசார இயக்கம் தொடங்கியுள்ளது.

இவை 2004-ம் ஆண்டு ஜனவரியில் முதல் முறையாக தொடங்கப்பட்டன. இப்போது நாட்டின் பல பகுதிகளில் 25 மையங்கள் இயங்கிவருகின்றன.

கடந்த அக்டோபர் இறுதிவரை இவற்றில் விவசாயம் சம்பந்தமாக விவரம் கேட்டு 55.75 லட்சம் தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளன. இம்மையத்தை தொடர்புகொண்டால் உள்ளூர் மொழியிலேயே வேண்டிய தகவல்கள் தரப்படுவதுடன் விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு தீர்வு என்ன என்று தெரிவிக்கப்படுகிறது.

விவசாயம் சம்பந்தமாக "கேட்டதும் கிடைக்கும் கேள்விக்கு விடை' என்பதே இவற்றை நிறுவியதன் பிரதான நோக்கம். அதற்கு நல்ல பலன் கிடைத்துவருகிறது என்பது இதுவரை வந்துள்ள தொலைபேசி அழைப்புக்களின் எண்ணிக்கையிலிருந்து தெரியவருகிறது.

இந்த மையங்களால் பயன் கிடைத்துள்ளதா என்பதை உறுதிசெய்ய ஹைதராபாதில் உள்ள மேலாண்மை பணியாளர்கள் கல்லூரி ஆய்வு நடத்தி 2007-ம் ஜூலையில் அரசிடம் அறிக்கை அளித்தது.

பெண்கள் பங்கேற்பு மிகக்குறைவாக உள்ளது. இந்த தகவல் மையங்கள் பற்றிய விழிப்புணர்வு இல்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, இந்த தகவல் மையங்கள் பற்றி விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த பெரிய அளவில் பிரசார இயக்கத்தை துவக்கியிருக்கிறது அரசு. இதற்காக கட்டணமற்ற தொலைபேசி சேவையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**நெல்லிக்காய்க்கு சந்தையில் அதிக லாபம்**

த.தேவராஜ்

First Published : 18 Nov 2010 12:02:00 AM IST



கடலூர் : காயகல்ப மூலிகை என்றும் மூப்பைத் தடுக்கும், ரத்த விருத்தி செய்யும் சக்தி கொண்டது என்றும், மருத்துவ உலகில் நெல்லிக்காய் சிறப்பாகப் பேசப்படுகிறது.

இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு சுவை கொண்ட நெல்லிக்காயில், வேறுஎந்த கனிகளிலும் இல்லாத அளவுக்கு வைட்டமின் சி சத்து அதிகம் உள்ளது. ஒரு ஆரஞ்சு பழத்தில் இருப்பதுபோல் 20 மடங்கு வைட்டமின் சி, ஒரு நெல்லிக்காயில் உள்ளது.

ஒரு கிராம் நெல்லிக்காயில் 720 மி.கிராம் வைட்டமின் சி, 28 மி.கிராம் வைட்டமின் பி 1, கால்சியம் 15 மி.கிராம், பாஸ்பரஸ் 21 மி.கிராம் மற்றும் இரும்பு உள்ளிட்ட தாதுப் பொருள்களும் உள்ளன. நெல்லிக்காய் விதை சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் குணம் கொண்டது.

சிறுநீரகக் கோளாறு, ரத்தசோகை, மஞ்சள் காமாலை, அஜீரணக் கோளாறு, கணயத்தில் ஏற்படும் பிரச்னைகள் உள்ளிட்ட பல நோய்களுக்கு சிறந்த மருந்தாகவும் நெல்லிக்காய் பயன்படுகிறது. எனவே நெல்லிக்காய் மருந்தாகவும், ஊறுகாய், ஜாம் உள்ளிட்ட உணவு வகைகளாகவும் சந்தையில் கிடைக்கின்றன.

2,800 ஆண்டுகளுக்கு முன் சீனாவில் இருந்து இந்தியாவுக்கு நெல்லிக்காய் கொண்டு வரப்பட்டதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது. நெல்லி மரங்கள் மலைப் பகுதிகளில் நன்றாகவும் மற்ற பகுதிகளில் பராமரிப்புக்கு ஏற்பவும் வளர்கின்றன. வீடுகளிலும் தோட்டங்களிலும் காணப்பட்ட நெல்லி மரங்கள் தற்போது பணப் பயிராக, நூற்றுக்கணக்கான ஏக்கரில் தமிழக விவசாயிகள் பயிரிடத் தொடங்கி உள்ளனர்.

மித வெப்ப மண்டலங்களில் பயிரிடப்பட்டு வந்த நெல்லி, தற்போது, வெப்ப மண்டலங்களிலும் பயிரிடப்படுகிறது. இந்தியாவில் ஆண்டுக்கு 1,000 டன் நெல்லிக்காய் தேவை இருப்பதாகவும், தொடர்ந்து தேவை அதிகரித்து வருவதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சூப்பர் ரகம்

கோவை வேளாண் பல்கலைக்கழகம் உருவாக்கிய பி.எஸ்.ஆர். 1 என்ற நெல்லி ரகம் தமிழகத்தில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இதில் மருத்துவ குணம் அதிகம் என்பதால் இதற்கு சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது. மற்றும் வட இந்திய ரகங்களான சாக்கியா, என்.ஏ. 7, காஞ்சன் உள்ளிட்ட நெல்லி ரகங்களும் பரவலாகப் பயிரிடப்படுகின்றன.

எங்கு கிடைக்கும்?

அதிகம் செலவில்லாமல் நல்ல வருவாய் கிடைக்கும் பயிராக நெல்லிக்காய் விவசாயம் போற்றப்படுகிறது. நெல்லிக் கன்றுகள் தஞ்சை, சேலம், திண்டுக்கல், கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள நர்சரிகளில் கிடைக்கும். தண்ணீர் தேங்காத நிலங்களில் நெல்லி செழித்து வளரும். எல்லா காலங்களிலும் நெல்லி பயிரிடலாம்.

ஏக்கருக்கு 200 கன்றுகள் வரை நடப்படுகிறது. 15 நாள்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினால் போதும். பிப்ரவரி முதல் ஜூலை மாதம் வரை நெல்லிக்காய்கள் அறுவடை செய்யமுடியும்.

முதலாம் ஆண்டு ஏக்கருக்கு | 20 ஆயிரம் வரை செலவாகும். நட்டு 3-ம் ஆண்டு முதல் காய்கள் கிடைக்கும். 5-ம் ஆண்டு முதல் அதிக மகசூல் கிடைக்கும். 3 ஆண்டுகள் வரை நெல்லித் தோப்பில் மண் வளம் தரும் ஊடுபயிர்களை சாகுபடி செய்யலாம் என்றும், அதன் மூலம் கணிசமாக வருவாய் ஈட்ட முடியும் என்றும் வேளாண் அலுவலர்கள் தெரிவிக்கிறார்கள்.

அதிக செலவில்லாமல் ஆண்டுக்கு ஏக்கருக்கு | 1 லட்சம் வரை லாபம் கிடைக்கும். வியாபாரிகள் தோப்புக்கே வந்து நெல்லிக்காய்களை கொள்முதல் செய்கிறார்கள் என்றும் விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

விவசாயி பேட்டி

இதுகுறித்து திட்டக்குடியில் நெல்லி சாகுபடி செய்துள்ள விவசாயி வேணுகோபால் கூறியது: நான் ஒரு ஹெக்டேரில் நெல்லி பயிரிட்டுள்ளேன். செலவில்லாமல் அதிக வருவாய் தரும் பயிர் நெல்லிக்காய். வறண்ட பிரதேசங்களில் ஓரளவுக்கு தண்ணீர் இருந்தால் போதும். நெல்லிக்காய் விவசாயத்தை சிறப்பாகச் செய்து நல்ல லாபம் பெறமுடியும்.

4 ஆண்டுகளுக்கு முன்பு வரை நெல்லிக்காய் விற்பனை செய்வதில் அதிகம் பிரச்னைகள் இருந்தன. தற்போது சந்தை சிறப்பாக உள்ளது. கோவை வேளாண் பல்கலைக்கழகம் நெல்லிக்காய் சாகுபடியில் உயர் தொழில் நுட்பங்களில் பயிற்சி அளிக்கிறார்கள். பயிற்சி பெற்று நெல்லி விவசாயம் செய்தால் சிறப்பாக அமையும்.

கோவை வேளாண் பல்கைலக்கழகம் உருவாக்கிய பி.எஸ்.ஆர். 1 ரக நெல்லி, அதிக காய்ப்புத் திறன் கொண்டது. தமிழகத்தில் உற்பத்தியாகும் இந்த ரக நெல்லிக்காய் முழுவதும், மருந்துக்காக கேரள வணிகர்களால் கொள்முதல் செய்யப்படுகிறது. மற்ற வடஇந்திய ரகங்கள் பெருமளவுக்கு உணவுப் பொருள்களுக்காக கொள்முதல் செய்யப்படுகிறது என்றார் வேணுகோபால்.

**கத்தரியில் காய்ப்புழுவைத் தடுக்கும் முறை**

கே.மனோகரன்

First Published : 18 Nov 2010 12:00:00 AM IST



விழுப்புரம்: கத்தரியில் தற்போது பரவிவரும் காய்ப்புழுவை தடுத்து மகசூலை பெருக்குவது எப்படி என்று தோட்டக்கலைத் துறையின் வழிகாட்டுதலை பின்பற்றி விவசாயிகள் பயன்பெறலாம்.

கத்தரி இந்தியாவை தாயகமாகக் கொண்ட பயிராகும். இந்த பயிர் விழுப்புரம் மாவட்டத்தில் நடப்பு வருடம் 323 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் காய்ப்பு பருவத்தில் உள்ள கத்தரியிலிருந்து பெறும் மகசூலை விவசாயிகள் விழுப்புரம், திண்டிவனம், பண்ருட்டி, புதுவை மற்றும் கோயம்பேடு ஆகிய ஊர்களில் உள்ள சந்தைகளில் விற்பனை செய்து வருகின்றனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு அதிகபட்சமாக கிலோ ஒன்று |15 வரை விற்பனை செய்து வந்த விவசாயிகள் கடந்த இரண்டு மாதமாக நிலவிய குறைந்த சந்தை விலையின் காரணமாக கத்தரி தோட்டங்களை போதிய பராமரிப்பின்றி வைத்திருந்த காரணத்தால் தண்டு மற்றும் காய்த்துளைப்பான் தாக்குதல் பரவலாக தென்பட்டு மகசூல் இழப்பை ஏற்படுத்தி வருகிறது.

தற்போதைய சூழ்நிலையில் கூடுதல் விலை கிடைப்பதால் கத்தரியில் கூடுதல் மகசூல் பெறுவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கைவினை முறைகள்: பாதிக்கப்பட்ட குருத்துப் பகுதி மற்றும் தண்டுப் பகுதிகளை அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும், செடிகளில் தோன்றும் காய்ப்புழுக்களை ஆள்கள் மூலம் சேகரித்து அழிக்கலாம். அந்த வேளையில் வயலில் விளக்குப் பொறிகள் அமைப்பதன் மூலம் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

உழவியல் முறைகள்: தொடர்ந்து கத்திரி சாகுபடி செய்வதை தவிர்ப்பதன் மூலம் இந்த பூச்சியினை கட்டுப்பாட்டுக்குள் வைக்கலாம். குட்டையான மற்றும் நீளமான காய்கள் கொண்ட ரகங்களை தேர்வு செய்து நடவு செய்வதால் கத்தரிக்காய் துளைப்பான் தாக்குதலை சமாளிக்கலாம்.

கத்திரி வயலைச் சுற்றிலும் இரு வரிசைகளில் மக்காச்சோளம் பயிரை பொறி பயிராக சாகுபடி செய்து காய்த்துளைப்பான் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். தோட்டத்தைச் சுற்றிலும் உள்ள

காய்துளைப்பானுக்கு இலக்காகும் கத்தி குடும்ப களைகளை அப்புறப்படுத்தி சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் பூச்சிகள் பெருக்கத்தை கட்டுப்படுத்தலாம்.

உயிரியல் முறைகள்: பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை ஏக்கருக்கு 1500 மி. லிட்டரை 500 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம். பெவேரியா பேசியானா உயிரியல் காரணியினை ஒரு லிட்டர் நீருக்கு 3 மி.லி. வீதம் கலந்து தெளித்து இந்தப் பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

டிரைக்கோகிராம்மா கைலோனிஸ் ஹெக்டேருக்கு 5000 எண்கள் கத்தரி நடவு செய்த மூன்றாம் மாதம் முதல் வயல்களில் விட்டு இந்த பூச்சியினை கட்டுப்படுத்தலாம். இனக் கவர்ச்சி பொறிகள் ஒரு ஹெக்டேருக்கு 12 எண்கள் வீதம் உபயோகப்படுத்தி ஆண் பூச்சிகளை கவர்ந்து அழிப்பதன் மூலம் இப்பூச்சியை கட்டுப்பாட்டிற்குள் வைக்கலாம்.

ரசாயன முறைகள்: எண்டோசல்பான் 35 இசி மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 2 மி.லி. வீதம் கலந்து இத்துடன் 3 மி.லி. வேப்ப எண்ணெய் கலந்து ஒரு டேங்குக்கான திரவத்துடன் 5 மி.லி. டீப்பால் ஒட்டும் திரவம் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் மூன்று முறை தெளித்து இந்த பூச்சியினை கட்டுப்படுத்தலாம்.

மாலத்தியான் 50 இசி மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 1 மி.லி. வீதம் கலந்து தெளிப்பதன் மூலமும் இந்தப் பூச்சியை கட்டுப்படுத்தலாம் என்று தோட்டக்கலைத் துறை பரிந்துரை செய்துள்ளது.

வயல்களில் ஆய்வு

இதுகுறித்து துணை இயக்குநர் என்.பன்னீர்செல்வம் கூறியது:

கத்தரி காய்த்துளைப்பானை கட்டுப்படுத்தும் போது ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை முறைகளை (உழவியல், உயிரியல், கைவினை, ரசாயன முறைகள்) கையாண்டு கத்தரிக் காய்த்துளைப்பான் மேலாண்மை செய்யலாம்.

மேலும் கத்தரிக்கு ரசாயன பூச்சிக்கொல்லி உபயோகப்படுத்தும்போது பரிந்துரை செய்த அளவுகளில் சரியான அளவில் நீர் கலந்து உரிய இடைவெளியில் தெளித்தால் நல்ல பலனை பெறலாம்.

வானூர் வட்டாரம் வினாயகபுரம் கிராமத்தில் ராமதாஸ் மற்றும் எடப்பாளையம் கிராமத்தில் ஏழுமலை ஆகிய விவசாயிகள் சாகுபடி செய்துள்ள செவந்தம்பட்டி ரக கத்தரி வயல்களை ஆய்வு செய்தபோது காய்ப்புழுவின் தாக்குதலை பார்வையிட்டு மேற்படி பரிந்துரைகளை கடைபிடிக்குமாறு சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்கூறப்பட்ட நடைமுறைகளை இந்த மாவட்டத்தின் ஏனைய பிற விவசாயிகளும் கடைப்பிடித்து கத்தரியில் மகசூல் இழப்பை ஏற்படுத்தும் காய்ப்புழுக்களை நிர்வாகம் செய்யலாம் என்று தெரிவித்தார்.

**வயல் வெளியில் களங்கள், தானிய சேமிப்புக் கிடங்குகள் அமைக்க வேளாண் துறை உதவி**

First Published : 17 Nov 2010 11:18:04 AM IST

காரைக்கால், நவ. 16: வயல் பகுதியில் களங்கள், தானிய சேமிப்புக் கிடங்குகள் அமைக்க வேளாண் துறை உதவி அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுச்சேரி அரசின் வேளாண் துறை, விவசாய விளைபொருள்களின் மதிப்பை உயர்த்தும் நோக்கில் விவசாயிகள் தங்கள் சொந்த நிலத்தில் வயல்வெளி களங்கள், தானிய சேமிப்புக் கிடங்குகளை அமைத்துக் கொள்வதற்கான திட்டத்தை செயல்படுத்தவுள்ளது. இதன் மூலம் களம் மற்றும் சேமிப்புக் கிடங்குகள் அமைத்துக் கொள்பவர்களுக்கு அவர்கள் செலவிடும் தொகையில் 50 சதமோ அல்லது அதிகபட்சமாக முறையே | 1.50 லட்சம் மற்றும் | 3 லட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது. இதில் பயனடைய விரும்புவோர், அந்தந்த பகுதியில் உள்ள உழவர் உதவியகங்களில் விண்ணப்பத்தை பெற்று, நிறைவு செய்தவைகளை 29.11.2010-க்குள் அதே உழவர் உதவியகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு ரூ.2.9 கோடி ஈட்டுத்தொகை**

First Published : 17 Nov 2010 12:01:21 PM IST

ஆரணி, நவ.16: ஆரணி பகுதி விவசாயிகளுக்கு தேசிய வேளாண்மை பயிர் ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் 2,617 விவசாயிகளுக்கு ரூ.2 கோடியே 90 லட்சம் நஷ்ட ஈட்டுத்தொகையை ஆரணி எம்எல்ஏ ஆர்.சிவானந்தம் வழங்கினார் (படம்).

இதற்கான விழா ஆரணி அடுத்த அரையாளம் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மேற்குஆரணி ஒன்றியக்குழுத் தலைவர் க.சங்கர் தலைமை தாங்கினார். கூட்டுறவு சார்-பதிவாளர்கள் என்.சமுத்திரவிஜயன், ராம.ராஜேந்திரன், அரையாளம் ஊராட்சித் தலைவர் லஷ்மிபாலன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**பூண்டி ஏரியின் நீர்மட்டம் 32 அடியாக உயர்வு**

First Published : 18 Nov 2010 01:49:48 AM IST



நிரம்பி வரும் பூண்டி ஏரி.

திருவள்ளூர். நவ. 17: சில நாள்களாக பெய்து வரும் பலத்த மழையின் காரணமாக சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி ஏரியின் நீர் மட்டம் கணிசமாக உயர்ந்து புதன்கிழமை காலை நிலவரப்படி 32.02 அடியாக உயர்ந்துள்ளது.

சென்னை மாநகரம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு முக்கிய நீர் ஆதாரமாக விள்ககும் செம்பரம்பாக்கம் ஏரி, புழல் ஏரி, சோழவரம் ஏரிகளுக்கு நீர் வழங்கும் பூண்டி ஏரி 35 அடி உயரம் நீர்மட்டம் கொண்டது.

கடந்த ஆகஸ்ட் மாதம் வரை பூண்டி ஏரியில் 26 அடி உயரம் அளவு மட்டுமே

நீர் மட்டம் இருந்த நிலையில் அக்டோபர் மாதம் கிருஷ்ணா நதியின் கண்டலேறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்ட நிலையில் பூண்டி ஏரியின் நீர்மட்டம் சற்று உயர்ந்தது.

இந்நிலையில் பருவ மழை தீவிரமடைந்த நிலையிலும் கண்டலேறு அணையில் இருந்து அதிகப்படியான நீர் பூண்டி ஏரிக்கு வரத் தொடங்கியதாலும் பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயர்ந்தது. புதன்கிழமை காலை நிலவரப்படி பூண்டி ஏரியின் நீர்மட்டம் 32.02 அடியாக உயர்ந்துள்ளது. கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு வினாடிக்கு 386 கன அடி நீர் வந்துக் கொண்டிருக்கிறது. அதே நேரம் தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக பூண்டி ஏரிக்கு வினாடிக்கு 703 கன அடி நீர் வந்துக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் பூண்டி ஏரியில் இருந்து செம்பரம்பாக்கம், புழல், சோழவரம் ஏரிகளுக்கு இணைப்பு கால்வாய்கள் மூலம் வினாடிக்கு 411 கன அடி நீரும், சென்னை குடிநீர் நீர் ஏற்ற நிலையத்துக்கு பேபி கால்வாய் மூலம் வினாடிக்கு 10 கன அடி நீரும் வெளியேறுகிறது.

இதனால் சென்னைக்கு குடிநீர் அளிக்கும் ஏரிகள் நிரம்பி வழிவதுடன், இந்த மழை மேலும் தொடர்ந்தால் கோடைக்காலத்தில் சென்னையில் குடிநீர் தட்டுப்பாடு இருக்காது என்று அதிகாரிகள் கருதுகின்றனர்.

தினமலர்

**பயிர் சுகாதாரத்தில் முதுநிலை பட்டயம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,02:03 IST

சென்னை : பயிர் பாதுகாப்பு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திடும் வகையில், கோவை வேளாண் பல்கலைக்கழகமும், மத்திய வேளாண் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய பயிர் சுகாதார மேலாண்மை நிறுவனமும் இணைந்து, பயிர் சுகாதாரத்தில் முதுநிலைப் பட்டயம் வழங்க முடிவு செய்துள்ளன.இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழக அரசின் வேளாண்மைத் துறை செயலர் ராமமோகன ராவ் முன்னிலையில், தலைமைச் செயலகத்தில் நேற்று நடந்தது.இந்நிகழ்ச்சியில், வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி, தேசிய பயிர் சுகாதார மேலாண்மை நிறுவன இயக்குனர் சத்யகோபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஒரு வாழைப்பழ சீப்பில் 62 பழங்கள் இருந்த அதிசயம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,02:18 IST

ராசிபுரம்: ஒரே வாழைப்பழ சீப்பில் 62 பழங்கள் இருப்பதை சுற்று வட்டாரத்தை சேர்ந்த மக்கள் அதியசயத்துடன் பார்த்துச் சென்றனர். ராசிபுரம் உழவர் சந்தையில் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் தங்களது விளை நிலத்தில் சாகுபடி செய்த காய்கறிகளை தினமும் அறுவடை செய்து விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். அதை மக்கள் தங்களது தேவைக்கேற்ப வாங்கி வந்து பயன்படுத்துவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். இந்நிலையில் நேற்று ஒரு விவசாயி தங்களது தோட்டத்தில் விளைந்து வாழத்தாரை விற்பனைக்கு கொண்டு வந்தார். அந்த வாழைத்தாரில் ஒரு சீப்பில் மட்டும் 62 வாழைப்பழங்கள் இருப்பது தெரியவந்தது. அதை பார்த்த மக்கள் வியந்தனர். ஒரே சீப்பில் அதிகப்படியான பழங்கள் இருப்பது தெரியவந்ததும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த ஏராளமான மக்கள் வந்து அதிசய வாழைப்பழ சீப்பை பார்த்துச் சென்றனர்.

**தொடர் மழையால் வேர்க்கடலை பயிர் சேதம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,01:28 IST

திருத்தணி : தொடர் மழையால் வேர்க்கடலை பயிர் சேதம் அடைந்ததால் விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர்.

கடந்த 10 நாட்களுக்கு முன்பு "ஜல்' புயலால் திருத்தணி மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் பலத்த மழை பெய்தது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.மேலும் பலத்த மழையால் விவசாய கிணறுகள், ஏரிகள் மற்றும் குட்டைகளில் ஓரளவுக்கு மழைநீர் நிரப்பியது. ஏரிகளில் தண்ணீர் இருப்பு உள்ளதால் விவசாயிகள் நெல், வேர்க்கடலை பயிர் செய்வதற்காக நிலத்தை உழுது தயார்படுத்தியிருந்தனர். பெரும்பாலான விவசாயிகள் கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு நிலத்தில் வேர்க்கடலை போட்டனர்.வேர்க்கடலை பயிர் செய்தது முதல் தொடர்ந்து மழை பெய்து வருவதால், முளைக்காமல் சேதம் அடைந்தது.இதில் பல விவசாயிகள் கடன் வாங்கி வேர்க்கடலை பயறு வாங்கி வந்து நிலத்தில் போட்டனர். நெற்பயிர் செய்த விவசாயிகள் மட்டும் தொடர் மழையால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.நிவாரணம் வழங்கப்படுமா?திருத்தணி அடுத்த வி.கே.ஆர்.புரம், கொத்தகுப்பம், சிறுகுமி, தாடூர், வி.கே.என்.கண்டிகை, டி.சி.கண்டிகை, செருக்கனூர், ராமகிருஷ்ணாபுரம், மாம்பாக்கசத்திரம் உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் செய்த வேர்க்கடலை பயிர் தொடர்மழையால் சேதம் அடைந்துள்ளது.இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சேதம் அடைந்த விவசாயிகளின் பயிர்களை நேரில் சென்று ஆய்வு செய்து உரிய நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

**சென்னை விவசாய கருத்தரங்கு பெயர் பதிவுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,00:18 IST

ஆலங்குடி: "சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நவம்பரில் நடக்கும் மாநில அளவிலான விவசாய கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பங்கேற்க விவசாயிகள் முன்பதிவு செய்து கொள்ளலாம்,'என புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் அறிவியல் நிலைய தலைவர் சின்னையன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் மாநில அளவிலான விவசாய கண்காட்சியில் புதிய ரக விதைகள், புதிய தொழில் நுட்பங்கள், விவசாயக்கருவிகள் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட உள்ளன. வேளாண்மை பல்கலை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் விவசாயிகளுக்கிடையே கலந்துரையாடல் நிகழ்ச்சியும் நடக்க உள்ளது. தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் நடக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க விரும்பும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் ஆலங்குடி அருகே உள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் முன்பதிவு செய்துகொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு 04322-290321 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**பாரம்பரிய பயிர் ரகங்களை அழியாமல் பாதுகாக்கவேண்டும் : செயலாளர் ராம மோகனராவ் யோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,01:47 IST

மதுரை : ""பாரம்பரிய பயிர் ரகங்களை கண்டறிந்து, அவற்றை அழியாமல் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என, தமிழக அரசு வேளாண் துறை செயலாளர் பி. ராம மோகனராவ் தெரிவித்தார்.

மதுரை விவசாயக் கல்லூரியில் நடந்த விஞ்ஞானிகள், பேராசிரியர்கள் சந்திப்பு கலந்துரையாடலில் அவர் கூறியதாவது : மானாவாரி மற்றும் கண்மாய் பாசனம் மூலம் செய்யப்படும் விவசாயத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். வேளாண் பயிர்களில் பல்வேறு உள்நாட்டு ரகங்கள், சிறு தானிய ரகங்கள் உள்ளன. இத்தகைய ரகங்களை கண்டறிந்து, அழியாமல் பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

பருவநிலை மாற்றத்துக்கு ஏற்பவும், அந்தந்த இடங்களுக்கு ஏற்ற பயிர் ரகங்களை பயிரிட வேண்டும். ஆடி 18ல் விதை விதைப்பது போன்ற பாரம்பரியமாக பின்பற்றப்படும் தொழில்நுட்பங்களை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்ய வேண்டும், என்றார். மதுரை விவசாயக் கல்லூரி டீன் வைரவன், மனையியல் கல்லூரி டீன் பானுமதி மற்றும் பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர்.

**நிலக்கடலை சாகுபடிக்கு மானியம்:வேளாண் இணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,00:43 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கார்த்திகை பட்டத்தில் இறவையில் நிலக்கடலை சாகுபடிக்கு பல்வேறு மானியங்கள் வழங்கப்படுகிறது' என வேளாண் இணை இயக்குனர் ராஜன் தெரிவித்தார். அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆண்டுக்கு சராசரியாக இறவைப் பருவத்தில் 800 முதல் 1,200 ஹெக்டேரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, நல்ல மழை பெய்து போதுமான நீர்பான வசதி இருப்பதால் இறவை நிலக்கடலை சாகுபடி செய்ய ஏற்ற சூழ்நிலையுள்ளது. முக்கிய தொழில் நுட்பங்களாக தரமான சான்று விதை உபயோகித்தல், உயிர் உரம் மற்றும் பூஞ்சான விதை நேர்த்தி, அடியுரமிடுதல் மற்றும் ஜிப்சம் இடுதல் ஆகியவற்றை விவசாயிகள் பின்பற்றினால் ஏக்கருக்கு 800 முதல் 1,000 கிலோ வரை உலர்ந்த நிலக்கடலை மகசூல் எளிதாக பெறலாம்.

ஒரு கிலோ 30 ரூபாய் என கணக்கில் கொண்டால் கூட ஏக்கருக்கு 24,000 ரூபாய் முதல் 30,000 ஆயிரம் ரூபாய் வரை 120 நாட்களில் பெறலாம். இறவை நிலக்கடலையில் அதிக மகசூல் எடுக்க கண்டிப்பாக டிசம்பர் 2ம் தேதிக்குள் விதைப்பு மேற்கொள்ள வேண்டும். ஏக்கருக்கு 50 முதல் 55 கிலோவுக்கு குறையாமல் விதை பயன்படுத்தி விதைப்பு செய்து ஒர சதுர மீட்டருக்கு கண்டிப்பாக 33 செடிகளுக்கு குறையாமல் இருக்க வேண்டும். அதிக நீர் பாசனம் மேற்கொள்ளலாமல்

தேவைக்கு ஏற்ப நீர் பாய்ச்சினால் போதுமானது. கண்டிப்பாக ஏக்கருக்கு அடியுரமாக 50 கிலோ ஜிப்சம் இட வேண்டும். மேலும் விதைத்த 45 வது நாளில் 80 கிலோ ஜிப்சத்தினை இட்டு மண் அணைக்க வேண்டும்.

எண்ணெய் வித்து பயிர்களை விவசாயிகள் அதிக அளவில் சாகுபடி செய்ய ஊக்குவிக்கும் வகையில் "ஐசோபாம்' மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பல்வேறு மானியங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. வேளாண் விரிவாக்க மையங்களில் உள்ள கரு மற்றும் ஆதார விதைகளை வாங்கி விதைப்பண்ணை அமைந்து விளைந்த விதைகளை வேளாண் துறைக்கு வழங்கும் போது ஒரு கிலோவுக்கு 10 ரூபாய் உற்பத்தி மானியம் வழங்க்பபடும். ஆதாரம் மற்றும் சான்று நிலை விதைகளுக்கு கிலோவுக்கு 12 ரூபாய் வீதம் விநியோகம் மானியம் வழங்கப்படுகிறது. தழைச்சத்து மற்றும் மணிச்சத்து எளிதில் கிடைக்க வகை செய்யும் உயிர் உரங்களான "ரைசோபியம்' மற்றும் "பாஸ்போ பாக்டீரியா' பொட்டலங்கள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. நிலக்கடலை காய்கள் திரட்சியாகவும் அதிக எடையுள்ளதாகவும் மற்றும் எண்ணெய் சதவீதத்தை அதிகரிக்க "ஜிப்சம்' 50 சத மானியத்தில் வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தெளிப்பு நீர் பாசன கருவி எண்ணெய் வித்து பயிர்களுக்கு அமைக்க ஹெக்டேருக்கு 7,500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

**பருத்தி பயிர் நாசம் நிவாரணம் கேட்டு மனு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2010,01:11 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கடந்த வாரத்தில் பெய்த "ஜல்' புயல் மழையால் பருத்தி பயிர் நாசமானது. பயிர் சேதத்துக்கு நிவாரணம் கேட்டு ரெட்டிப்பட்டி பகுதியை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலெக்டரிடம் மனு கொடுத்தனர். தர்மபுரி அடுத்து ரெட்டிப்பட்டி, கோணங்கிஹள்ளி பகுதியில் 45 ஏக்கர் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து பயிரிடப்பட்டுள்ள இந்த பருத்தி செடியில் காய் முதிர்ந்து அறுவடை செய்யும் நேரத்தில் "ஜல்' புயலால் ஏற்பட்ட தொடர் மழையால் காய்கள் கருகி பயிர்கள் நாசமானது. இப் பயிர்களுக்கு முறையான இன்சூரன்ஸ் செய்யப்படாததால், லட்சக்கணக்கில் நஷ்டம் அடைந்த விவசாயிகள் தங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க கோரி கலெக்டர் ஆனந்தகுமாரிடம் மனு கொடுத்தனர்.

**காளை மாடுகள் வளர்ப்பதை தவிர்க்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2010,02:49 IST

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் இயந்திரங்களை பயன்படுத்துவது அதிகரித்து வருவதால், மாடு வளர்ப்பு குறைந்து வருகிறது. சில இடங்களில் காளை மாடுகளை

அடிமாட்டு விலைக்கு விற்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் அதிகம். ஏரி நீரைப் பயன்படுத்தி நெல், கரும்பு, வேர்கடலை, கேழ்வரகு, உளுந்து, துவரை, கம்பு, சோளம், மொச்சை ஆகியவற்றை பயிரிடுகின்றனர். முன்பு விவசாயிகள் நிலத்தை உழுவதற்கும், பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சவும் காளை மாடுகளை பயன்படுத்தினர். காளை மாடுகள் விவசாயத்திற்கு அதிகளவு உதவுவதால் பெரும்பாலான விவசாயிகள் சொந்தமான மாடுகளை வளர்த்து வந்தனர். காளை மாடுகள் பிறந்து ஐந்து வருடங்களாகியதும் விவசாயப் பணிகளுக்கு பழக்கப்படுத்துவர். சமீபகாலமாக விவசாயிகள் இயந்திரங்களைப் பயன்படுத்துவது அதிகரித்து விட்டது. டிராக்டர், மின் மோட்டார், அறுவடை இயந்திரம், களை எடுப்பு இயந்திரம் ஆகியவை வந்தபின் விவசாயத்திற்கு மாடுகளைப் பயன்படுத்துவது குறைந்து விட்டது. இதனால் விவசாயிகள் மாடுகள் வளர்ப்பது குறைய துவங்கி விட்டது.

மாடு வளர்ப்போரும் காளை மாடுகளை விவசாயத்திற்கு பழக்கப்படுத்த முடியாததால் அடிமாட்டு விலைக்கு விற்கின்றனர்.இதுகுறித்து காஞ்சிபுரம் அடுத்த முத்துவேடு கிராமத்தை சேர்ந்த விவசாயி மோகன்தாஸ் கூறியதாவது:பருவ மழை பொய்த்து போனதாலும், நிலத்தடி நீர் குறைந்து விட்டதாலும் விவசாயம் செய்ய முடியவில்லை. விளை நிலங்களில் முள்செடிகள் முளைத்துவிட்டன. பாசனக் கால்வாய்கள் தூர்ந்துவிட்டது. 30 வருடங்களுக்கு முன்பு ஒரு ஜோடி காளை மாடுகள் வைத்திருக்கும் குடும்பம் பட்டினி இல்லாமல் வாழ்ந்தது. தற்போது நிலைமை மாறிவிட்டது. இயந்திரங்கள் அதிகரித்துவிட்டதால் காளை மாடுகளுக்கு வேலை இல்லை. எனவே அவற்றை வளர்ப்பதை தவிர்த்து விட்டோம். காளை மாட்டை 5 வயது முதல் 14 வயது வரை விவசாயப் பணிகளில் ஈடுபடுத்தலாம். தற்போது மாடுகளை விவசாய வேலைக்கு விவசாயிகள் பழக்கப்படுத்துவதில்லை. அதற்கு பதிலாக 7 வயது முடிவதற்குள் இளம் காளை மாடுகளை அடிமாட்டுக்கு விற்று விடுகின்றனர். இதனால் மாட்டு வண்டிக்கு காளை மாடுகள் வாங்க வேலூர், விழுப்புரம், தர்மபுரி மாவட்டங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. இதே நிலை நீடித்தால் காளை மாடுகளை காண்பது அரிதாகிவிடும் என்றார்.

### இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் முறை குறித்த பயிற்சி

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2010,23:18 IST

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய்நல்லூர் அருகே இயந்திரம் மூலம் நெல்நடவு செய்யும் முறை குறித்த பயிற்சி முகாம் நடந்தது. திருவெண்ணெய்நல்லூர் அடுத்த அரசூரில் வேளாண்துறை, மகாத்மா காந்தி உழவர் மன்றம், வாட்டர் ஹார்வெர்ட் இணைந்து இயந்திரம் மூலம் நெல்நடவு செய்யும் முறை குறித்த பயிற்சி முகாம் நடந்தது. வேளாண் துணை இயக்குனர் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். உழவர் மன்ற நிர்வாகிகள் ரங்கதாஸ், தேவேந்திரன் முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி இயக்குனர் தேவநாதன் வரவேற்றார். நபார்டு வங்கி

பொது மேலாளர் உமாமகேஸ்வரராவ் பேசினார். வருணப்பிரியா அக்வாடெக் நிறுவன உதவி பொது மேலாளர் நாராயணன் யான்மர், குக்ஜெ இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் முறை குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் செய்து காண்பித்தார்.

**மழையால் உற்பத்தி பாதிப்பு: காய்கறி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2010,03:02 IST

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கனமழையால் காய்கறிகள் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், உழவர்சந்தை மற்றும் வெளிமார்க்கெட்டுகளில் காய்கறிகள் விலை "கிடுகிடு'வென உயர்ந்து வருவதால் நடுத்தர, ஏழை மக்கள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் அதிகளவு காய்கறிகள் உற்பத்தியாகிறது. இங்கு உற்பத்தியாகும் காய்கறிகள் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும், வட மாநிலங்களுக்கும் தினம் ஏற்றுமதியாகிறது.

குறிப்பாக ஓசூர் பத்தலப்பள்ளி மார்க்கெட்டில் இருந்து தினம் 1,000க்கும் மேற்பட்ட டன் காய்றிகள் வெளியிடங்களுக்கு ஏற்றுமதியாகிறது. உழவர்சந்தைக்கு விவசாயிகள் தினம் 150 டன் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.கடந்த இரு வாரமாக ஓசூர், பாகலூர், பேரிகை மற்றும் தேன்கனிக்கோட்டை பகுதியில் நல்ல மழை பெய்து வருகிறது. இதனால், காய்கறி செடிகள் கனமழைக்கு சேதமடைந்து உற்பத்தி குறைந்துள்ளது.உள்ளூர் மற்றும் வெளியூர் மார்க்கெட்டுகளில் வரத்து குறைவால் காய்கறிகள் விலை "கிடுகிடு'வென உயர்ந்து வருகிறது. அன்றாட சமையல்களில் முக்கிய பங்கு வகிக்கும் காய்கறிகள் விலை உயர்ந்துள்ளதால் நடுத்தர மற்றும் ஏழைமக்கள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

ஒரு மாதத்துக்கு முன் கிலோ 10 ரூபாய்க்கு விற்ற பீன்ஸ் தற்போது கிலோ 20 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்பனையாகிறது. கிலோ 10 ரூபாய்க்கு விற்ற கேரட் கிலோ 18 ரூபாய் முதல் 25 ரூபாய்க்கும், கிலோ 5 ரூபாய்க்கு விற்ற மூட்டைகோஸ் 8 ரூபாய் முதல் 15 ரூபாய்க்கும், கிலோ 15 ரூபாய்க்கு விற்ற உருளை கிழங்கு 18 ரூபாய் முதல் 25 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கிலோ 7 ரூபாய்க்கு விற்ற கத்திரிக்காய் 10 ரூபாய் முதல் 15 ரூபாய்க்கும், கிலோ 5 ரூபாய்க்கு விற்ற தக்காளி 8 ரூபாய் முதல் 15 ரூபாய்க்கும், கிலோ 20 ரூபாய்க்கு விற்ற பெரிய வெங்காயம் 32 ரூபாய் முதல் 35 ரூபாய்க்கும், கிலோ 20 ரூபாய் விற்ற சிறிய வெங்காயம் 26 ரூபாய் முதல் 30 ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

உள்ளூர் சாலையோர மார்க்கெட்டுகளில் இந்த விலை உயர்வு இரட்டிப்பாக்கி வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர். விலை உயர்வதால் வியாபாரிகளும், விவசாயிகளும் கிலோ கணக்கில்

மட்டுமே காய்கறிகளை விற்பனை செய்கின்றனர். கால் கிலோ அரைகிலோவுக்கு காய்கறிளை விற்பனை செய்ய மறுப்பதால் அன்றாடம் காய்கறிகள் வாங்கி வந்த நடுத்தர, ஏழை மக்கள் காய்கறிகள் வாங்க முடியாமல் கடும் அவதியடைந்துள்ளனர். உழவர் சந்தை மற்றும் வெளிமார்க்கெட்டுகளில் விலைஉயர்வை காரணம் காட்டி வியாபாரிகள் காய்கறிகளை சூழ்நிலைக்கு தகுந்த விலை நிர்ணயம் செய்து விற்கின்றனர்.

மழையால் தரமான காய்கறிகள் சந்தைக்கு தற்போது விற்பனைக்கு வருவதில்லை. மழையால் சேதமடைந்த காய்கறிகளையும், விலை உயர்வால் விளையும் முன் காய்கறிகளை பறித்தும் விவசாயிகள் சந்தைகளுக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.வியாபாரிகள் நேரடியாக விவசாய நிலத்துக்கு சென்று விற்பனைக்கு முன் பணத்தை கொடுத்து காய்கறிகளை விலை பேசி கொள் முதல் செய்து வருகின்றனர். இதனால், உழவர் சந்தை மற்றும் உள்ளூர் காய்கறி மார்க்கெட்டில் காய்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

**வெங்காயம் விலை உயர்வு எதிரரொலி :முட்டை கோஸ் விலையும் திடீர் உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2010,03:20 IST

சேலம்: வெங்காய விலை வரலாறு காணாத வகையில் உயர்வு ஏற்பட்டுள்ளதன் எதிரொலியாக அசைவ ஹோட்டல்கள், பிளாட்பார இரவு நேர கடைகளில், வெங்காயத்துக்கு மாற்றாக முட்டை கோஸ் பயன் படுத்தப்பட்டு வருவதால் அதன் விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வெங்காய விலையில் வரலாறு காணாத உயர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த 2006 மார்ச்சில் தமிழகத்தில் பெரிய வெங்காயம் அதிக பட்சமாக கிலோ 35 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது தமிழகத்துக்கு மஹாராஷ்டிரா, ஆந்திரா, குஜராத், கர்நாடகா மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த வெங்காயம் முற்றிலும் நின்று விட்டது. இதன் காரணமாக பெரிய வெங்காயத்தின் விலையில் மேலும் உயர்வு ஏற்படும் என வியாபாரிகள் தெரிவித்து வருகின்றனர்.

பழைய சாதனையை முறியடித்து கிலோ 45 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலைக்கும் தரமான பெரிய வெங்காயம் ஹோட்டல் உரிமையாளர்களுக்கு கிடைப்பது இல்லை. அதிக விலை கொடுத்து வாங்கப்படும் வெங்காயத்தில் கிலோவுக்கு 100 கிராம் முதல் 200 கிராம் வரை கழிவு ஏற்பட்டு விடுகிறது. அந்த அளவுக்கு தற்போது விற்பனைக்கு வரும் வெங்காயம் மழை காரணமாக அழுகிய நிலையில் தான் விற்பனைக்கு வருகிறது. அதே நேரத்தில் சிறிய

வெங்காயத்தை பயன் படுத்த விரும்பினாலும், அந்த வெங்காயம் விலையும் உயர்ந்துள்ளது. அத்துடன் சிறிய வெங்காயத்தை பயன் படுத்த வேண்டு மெனில் அதில் வேலைப்பாடு அதிகம். தங்களின் இழப்பை சரி செய்யும் வகையிலும் வெங்காயத்துக்கு மாற்றாக தற்போது ஹோட்டல் உரிமையாளர்கள் முட்டை கோஸை பயன் படுத்த துவங்கி உள்ளனர்.

இந்த நவீன யுக்தியை தற்போது இரவு நேர கடைகளில் மட்டுமின்றி பெரிய ஹோட்டல்களிலும் அமலாகி உள்ளது. வெங்காயத்துக்கு மாற்றாக முட்டை கோஸ் பயன் படுத்த துவங்கி உள்ள நிலையில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக முட்டை கோஸ் வரத்தும் சரிந்துள்ளது. இதனால் முட்டை கோஸ் விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் வரை முட்டை கோஸ் கிலோ 12 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது வரவேற்பு அதிகரித்துள்ளதன் காரணமாக இதன் விலையில் கிலோவுக்கு 10 ரூபாய் வரை அதிகரித்து, கிலோ 20 ரூபாய் முதல் 22 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

**கோவை காய்கறி மார்க்கெட்களில் "வெங்காய ஆட்சி': விலை கடும் உயர்வு; மக்கள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2010,03:02 IST

கோவையில் காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் ஏழை, நடுத்தர மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். "வெங்காயத்தின் விலையை கேட்டாலே கண்ணீர் வருகிறது; தேங்காய் விலை கேட்டால் தலை சுற்றுகிறது' என, புலம்புகின்றனர். ஆந்திரா, கர்நாடகம், மகராஷ்டிரா மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் ஒசூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஒட்டன்சத்திரம், ஊட்டி பகுதிகளில் இருந்து கேரட், உருளைக் கிழங்கு, வெங்காயம், தக்காளி, பீன்ஸ், முட்டைக்கோஸ், டர்னீப் உள்ளிட்ட காய்கறிகள் கோவையிலுள்ள மொத்த மார்க்கெட்களுக்கு விற்பனைக்கு வருகின்றன. மொத்த விலைக்கு இவற்றை கொள்முதல் செய்யும் வியாபாரிகள், பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்துச் சென்று சில்லரை முறையில் லாபம் வைத்து விற் கின்றனர். இரு வாரங்களுக்கு முன் சற்று இறங்கு முகத்திலிருந்த காய்கறிகளின் விலை, தற்போது கிடுகிடுவென உயர்ந்துள்ளது. சில்லரை முறையில் பெரிய வெங்காயம் கிலோ 36 - 40 ரூபாய்க்கும், சிறிய வெங்காயம் கிலோ 25 -30 ரூபாய் வரையும் விற்கப்படுகிறது.

கத்தரி கிலோ ரூ.24, பாகற்காய் ரூ.24, பீர்க்கன்காய் ரூ.18, வெண்டை ரூ.20, பீட்ரூட் ரூ.16, உருளைக்கிழங்கு ரூ.24, தக்காளி ரூ. 18-20, கேரட் மற்றும் பீன்ஸ் ரூ.35 - 40, முட்டைக்கோஸ் ரூ.16, கொத்தமல்லி கிலோ ரூ.30, முள்ளங்கி ரூ.16க்கும் விற்கப்படுகின்றன. இதே போன்று, மற்ற காய்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளது. குறிப்பாக, சிறிய ரக தேங்காய் ரூ.8 - 10க்கும்,

பெரிய ரக தேங்காய் 12-15 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. வடகிழக்கு பருவமழை காரணமாக காய்கறி அறுவடை பாதித்து, கோவை மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்ததால் விலை கடுமையாக உயர்ந்திருப்பதாக கூறுகின்றனர், வியாபாரிகள். தீபாவளி பண்டிகையின்போது திடீரென எகிறிய காய்கறிகளின் விலை, இன்னும் இறங்காமல் உச்சத்திலேயே இருப்பதால் ஏழை, நடுத்தர மக்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

நான்கு உறுப்பினர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு ஒரு வேளை உணவுக்கான காய்கறிகளை வாங்கவே 50 ரூபாய்க்கும் அதிகமாக செலவு ஏற்படுவதாக, இல்லத்தரசிகள் புலம்புகின்றனர். கோகில வேணி: இந்தியா, விவசாய நாடு என்று கூறுகிறோம். கிராம பொரு ளாதாரம் விவசாயத்தை நம்பியே உள்ளது. அவ்வாறு இருக்க, விளைபொருட்களின் விலை எப்படி கடுமையாக உயருகிறது என்ற கேள்வி எழுகிறது. விளைவித்த விளை பொருட்களுக்குரிய விலை கிடைக்கவில்லையென விவசாயிகள் புலம்புகின்றனர்.
ஆனால், காய்கறிகளின் விலையோ, மக்க ளால் வாங்க முடியாத அளவுக்கு கடுமையாக உயர்ந்துள்ளது. இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் என்ன நடக்கிறது? என்பதே மர்மமாக உள்ளது. விளையபொருட்களுக்கு உரிய விலை விவசாயிகளுக்கு கிடைக்கவும், மக்களுக்கு குறைந்த விலையில் காய்கறிகளை விற்கவும் தமிழக அரசின் சார்பில் உழவர் சந்தைகள் செயல்படுகின்றன. ஆனால், வெளியிலுள்ள சில்லரை கடைகளில் விற்கப்படும் விலைக்கே, பெரும்பாலான உழவர் சந்தைகளிலும் காய்கறிகள் விற்கப்படுகின்றன. அவற்றில் சில காய்கறிகள் தரமற்று இருப்பதால், நம்பி வாங்க முடியாத நிலை உள்ளது. காய்கறி விலையை கட்டுக்குள் வைத்திருக்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்வது அவசியம். கலாதேவி: கோவை, விவசாய விளைநிலங்கள் அதிகமுள்ள மாவட்டம்.

இங்கு உள்ளூர் காய்கறிகளான தக்காளி, கத்தரி, வெண்டை, பீட்ரூட் உள்ளிட் டவை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. நீலகிரி மாவட் டத்தில் கேரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு அதிகளவில் பயிரிடப்பட்டு மார்க்கெட்களுக்கு கொண்டு வரப்படுகின்றன. எனினும், உள்ளூரில் விளையும் காய் கறிகளின் விலையும் கடுமையாக அதிகரித்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது. புஷ்பம்மாள்: காலையில் காய்கறி வாங்க கடைக்குச் செல்லவே "அச்சமாக' உள்ளது. சிறிய மற்றும் பெரிய வெங்காயத்தின் விலையை கேட்டாலே கண்ணீர் வருகிறது; தேங்காய் விலையை கேட்டால் தலை சுற்றுகிறது.

தென்னை விவசாயம் செழித்துள்ள மாவட்டங்களில் கோவையும் ஒன்று. அவ்வாறு இருக்க, தேங்காய் விலை எப்படி 10 - 15 ரூபாய்க்கு எகிறியது என தெரியவில்லை. ராஜேஸ்வரி: இரண்டு மாதத்துக்கு முன் கிலோ 10 ரூபாய்க்கு விற்ற தக்காளியின் விலை தற்போது 20 ரூபாய். அரை கிலோ வாங்கினால் ஐந்து, ஆறு தக்காளிகள் மட்டுமே எடையில் நிற்கின்றன. இதனால் சாம்பார்,

ரசத்தில் தக்காளி அதிகம் சேர்ப்பதை தவிர்க்க வேண்டியுள்ளது. உள்ளூர் காய்கறியான கத்தரியின் விலை கூட கிலோ 24 ரூபாய்க்கு உயர்ந்திருப்பது ஆச்சரியமாக உள்ளது.

**கால்நடை தீவனம் பயிரிடும் விவசாயிக்கு ரூ.2,500 மானியம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2010,03:04 IST

அன்னூர்: ""கால்நடை தீவனம் பயிரிடும் விவசாயிகளுக்கு 2,500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது," என, கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் தெரிவித்தார். கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்டத்தில் மாதம் ஒரு ஊராட்சியில் இலவச மருத்துவ முகாம் நடக்கிறது. இந்த மாத முகாம் தெலுங்குபாளையத்தில் நேற்று நடந்தது. முகாமை ஊராட்சி தலைவர் ராணி துவக்கி வைத்து பேசுகையில்,"பிள்ளையப்பம்பாளையம் ஊராட்சியில் 1,000க்கும் மேற்பட்ட ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட கால்நடைகள் உள்ளன. ஆனால் சிகிச்சை பெற பொன்னேகவுண்டன்புதூர் அல்லது கணேசபுரம் செல்ல வேண்டி உள்ளது. தெலுங்குபாளையத்தில் கால் நடை மருந்தகம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

கால்நடை பராமரிப்புத்துறை அவிநாசி சரக உதவி இயக்குனர் தங்கவேல் பேசியதாவது: அன்னூர், அவிநாசி, காரமடை வட்டாரங்களை உள்ளடக்கிய அவிநாசி சரகத்தில் இரண்டு கால்நடை மருத்துவமனைகளும், 10 மருந்தகங்களும், 12 கிளை நிலையங்களும் இயங்கி வருகின்றன. தேவையான சினை ஊசி, தடுப்பு மருந்து உள்ளிட்டவை உள்ளன. விவசாயிகள் மருந்தகங்களை சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க தமிழக அரசு கால்நடை தீவனம் பயிரிடும் விவசாயிகளுக்கு தலா 2,500 ரூபாய் மானியம் வழங்குகிறது.

கால்நடை வளர்ப்பின் மூலம் நல்ல வருமானம் பெறலாம். இவ்வாறு உதவி இயக்குனர் தங்கவேல் பேசினார். தி.மு.க., விவசாய அணி நிர்வாகி சுப்பு பேசுகையில்,""இங்கு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் இல்லாததால், விவசாயிகள் ஆவினுக்கு பால் சப்ளை செய்ய அதிக தொலைவு செல்ல வேண்டி உள்ளது. இங்கு பால் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.முகாமில் 87 விவசாயிகள் கால்நடைகளை கொண்டு வந்திருந்தனர். 217 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. 842 கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கப்பட்டு, 30 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டது.முகாமில் டாக்டர் அப்ரோஸ், ஆய்வாளர் ரவி ஆகியோர் பங்கேற்றனர். சிறந்த கிடாரிக்கு பரிசு வழங்கப்பட்டது.

**சமவெளிப்பகுதியில் பீட்ரூட் சாகுபடி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2010,00:00 IST



தமிழகத்தில் சமவெளிப்பகுதியில் பீட்ரூட் சாகுபடி துவங்க இருக்கின்றது. பீட்ரூட் மலைப்பகுதிகளில் சாகுபடி செய்யும் பயிர் ஆனாலும் விவசாயிகளின் முயற்சியால் தற்போது சமவெளியிலும் இதன் சாகுபடி நடந்துவருகின்றது. முதலில் இதன் சாகுபடி முறைகளை கவனிப்போம்.

**சாகுபடி முறைகள்:** சாகுபடிக்கு தேர்ந்து எடுக்கும் நிலங்கள் நல்ல வடிகால் வசதியைக் கொண்டிருக்க வேண்டும். பீட்ரூட் கிழங்கின் வடிவம் சிதறாமல் இருக்க நிலத்தினை 15-20 செ.மீ. ஆழத்திற்கு நான்கைந்து முறை உழுதுவிட வேண்டும் நில மேற்பரப்பில் கட்டிகள் இல்லாதபடி கவனித்துக் கொள்ள வேண்டும். நன்கு மக்கிய கோழி உரம் ஏக்கருக்கு 7 டன்கள் வரை இட்டு நிலத்துடன் கலக்கும்படி உழுதுவிடப்படுகின்றது. அதோடு அடி உரமாக டி.ஏ.பி. 3 மூடைகள் இடவேண்டும். அடுத்து வயலில் 1 அல்லது 1- 1.5 அடி இடைவெளியில் பார் போட்டு பாரின் இரு புறமும் 4 அங்குல இடைவெளியில் விதையினை விதைக்க வேண்டும். (ஜோடி விதைநடவு). நல்ல விதைகள் கிட்னி (சிறுநீரகம்) வடிவில் பழுப்பு நிறத்தில் இருக்கும். சாதாரண மாதங்களில் ஒரு விதை நடலாம். ஆனால் கடும் கோடையில் விதை பழுதில்லாமல் முளைக்க இரண்டு விதைகள் நடவேண்டும். பொதுவாக பீட்ரூட் பயிரில் விதை முளைப்பு பிரச்னை ஏதும் கிடையாது. மார்க்கெட்டுகளில் கிடைக்கும் விதைகள் நன்றாகவே முளைக்கின்றன. சாகுபடி சமயம் மொத்தமாக 20 பாசனங்கள் தேவைப்படும். விதை நட்டு பின் மூன்று நாட்களுக்கு ஒரு முறை முதல் 25 நாட்கள் பாசனம் செய்ய வேண்டும். பிறகு பூமியில் அடி ஈரம் ஓரளவு காய்ந்த பின் பாசனம் செய்ய வேண்டும். விதை நட்ட 20-ம் நாள் களைஎடுக்க வேண்டும். களையெடுத்து உடனே ஏக்கருக்கு 2 மூடை 17:17:17 காம்ப்ளக்ஸ் உரம் இடவேண்டும். விதை விதைத்த 40வது நாள் பொட்டாஷ் உரம் ஏக்கருக்கு 2 மூடைகள் இடவேண்டும். சாகுபடி சமயம் வயல் பூராவும் செடிகள் சொட்டையில்லாமல் வளர்த்துவிட வேண்டும்.

செடிகள் மாண்டு சொட்டை இடங்கள் ஏற்பட்டால் அந்த இடத்தில் அடர்த்தியாக களை முளைத்து களைஎடுப்பதற்காக ஏற்படும் செலவு கூடுதலாகிவிடும். பீட்ரூட் சாகுபடியில் விவசாயிகள் அடிக்கடி விஷ மருந்துகளை அடிக்க விரும்புவதில்லை. விவசாயிகள் சுத்த சாகுபடி செய்து பூச்சி வியாதிகள் பாதிப்பினை தவிர்த்து விடுகின்றனர். இத்தகைய விவசாயிகளுக்கும்

சவால் விடுவது வெட்டுப்புழுக்கள் ஆகும். இப்புழுக்கள் இலைகளை பயங்கரமாக கடித்துத் தின்று சோதனையை ஏற்படுத்துகின்றது. திருடர்களைப் போல் இரவில் வெளிவந்து செடிகளைத் தாக்கி மொட்டையடித்து விடுகின்றன. இவைகளை விவசாயிகள் விஷ மருந்தை தெளித்து அழிப்பதில்லை. அதற்கு பதில் விஷ மருந்து கலந்த உருண்டைகளை வைத்து கொன்றுவிடுகின்றனர். பச்சரிசி தவிட்டினை எடுத்துக்கொண்டு அதில் டூநட் என்னும் விஷமருந்தினை 300 மில்லி கலந்து மேலும் வெல்லப்பாகு ஊற்றி நன்கு பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக செய்து செடிகளுக்கு வயல் பூராவும் போட்டுவிடுகின்றனர். புழுக்கள் இரவில் இந்த இனிப்பான உருண்டைகளை தின்று மாண்டு விடுகின்றன. விவசாயிகள் எப்படியோ பாடுபட்டு உழைத்து குறைந்த செலவில் பயிர் பாதுகாப்பினை சிறப்பாக செய்து நல்ல மகசூலுக்கு வழிவகை செய்து கொள்கின்றனர். பீட்ரூட் பயிர் குறிப்பாக குறுகிய காலப்பயிர். விதை நட்ட 50-60 நாட்களிலேயே அறுவடைக்கு வந்துவிடுகின்றது. கிழங்கின் மையப்பகுதி 3.5 செ.மீ. விட்ட அளவிற்கு பருத்தவுடன் அறுவடை செய்ய வேண்டும். பேராசையில் கிழங்குகள் இன்னும் பருமனாகட்டும் என்று நிலத்தில் விடக்கூடாது. தற்போது விவசாயிகள் 120-150 நாட்கள் வயதுடைய ரகங்களை விட குறுகிய கால ரகமாகிய ஜீலம் சாகுபடியில் அதிக அக்கறை காட்டுகின்றனர். மொத்தம் ஒரு ஏக்கர் சாகுபடி செலவு ரூ.22,070. ஏக்கர் மகசூல் 10 டன் மதிப்பு ரூ.40,000. ஏக்கர் சாகுபடி செலவு ரூ.22,070 போக நிகர லாபம் ரூ.15,930. பல்லடம் பகுதியில் விவசாயிகள் சமவெளியில் பீட்ரூட் சாகுபடி செய்து வெற்றி கண்டுள்ளனர். பல்லடம் பகுதியில் பீட்ரூட் பயிர் பாசன வசதி பெறுவது கிணறுகளில் இருந்துதான். இந்த கிணறுகளில் நல்ல தண்ணீரும் கிடைக்கும். உப்பு தண்ணீரும் கிடைக்கும்.

இதில் ஆச்சர்யம் என்னவென்றால் இரண்டு வகை தண்ணீரிலும் குறிப்பாக உப்பு தண்ணீர் பாசனத்திலும் பீட்ரூட் நன்றாக வளருகின்றது. பீட்ரூட் சாகுபடியில் ஓரளவிற்கு பிரச்னைகள் குறைவு. மேகமூட்ட காலநிலை கிழங்கின் நிறம் மற்றும் தரத்தினை பாதிப்பதில்லை. மழை பெய்தவுடன் தண்ணீர் வடிந்துவிட்டால் கிழங்கு அழுகும் பிரச்னை கிடையாது. மிகக்கொடிய வியாதியோ, பூச்சிகளோ கிடையாது. விவசாயிகள் பீட்ரூட்டிற்கு அதிகம் உபயோகிப்பது கோழி உரமாகும். இதனால் பூச்சி, வியாதி ஓரளவு விழுவதில்லை. அறுவடை மற்றும் கிழங்குகளை மார்க்கெட்டிற்கு தயாரிப்பதில் மிகப்பெரிய பிரச்னை ஏதும் கிடையாது. **-எஸ்.எஸ்.நாகராஜன்**

**அதிக லாபத்துக்கு ""ஜீரோ பட்ஜெட்" சின்னவெங்காயம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2010,00:00 IST

**""சாம்பார் வெங்காயம்"** என்றுஅழைக்கப்படும் சின்னவெங்காயத்தை, ஜீரோ பட்ஜெட் முறையில் சாகுபடி செய்து, சிறப்பான மகசூல் கண்டு வருகிறார்கள் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அடுத்துள்ள எரசினாம்பாளையம் விவசாயத் தம்பதியினர் சுப்பிரமணியம் - வஞ்சிக்கொடி.

சுப்பிரமணியம் சாகுபடி முறை பற்றி சொல்லத் தொடங்கினார்.  சின்னவெங்காயத்தின் மொத்த வயது 60 முதல் 70 நாட்கள். வடிகால் வசதியுள்ள மணல் கலந்த, செம்மண் நிலங்களில் நல்ல மகசூல் கொடுக்கும். இரண்டு மூன்று உழவு போட்டு நிலத்தை பொலபொலப்பாக்க வேண்டும். கடைசி உழவுக்கு முன்பாக, அரை ஏக்கருக்கு மூன்று டன் தொழுஉரத்தை இறைத்துவிட்டு உழவு செய்ய வேண்டும் (இவருடைய நிலம் ஏற்கனவே மேய்ச்சல் நிலமாக இருந்ததால், கால்நடைகளின் கழிவுகள் நிலத்தில் மண்டிக் கிடக்கின்றன. அதோடு செடி, கொடிகளையும் மடக்கி உழுததால் தனியாக அடியுரம் எதுவும் போடப்படவில்லை). பிறகு, ஏர் மூலமாக ஓர் உழவு போடவேண்டும். இரண்டு அடி இடைவெளியில் பார் அமைத்து, பாத்தி நிறைய தண்ணீர் பாய்ச்சி, தண்ணீர் நன்றாக வற்றிய பிறகு, அரையடிக்கு ஒரு காய் வீதம் வெங்காயத்தை ஈர நடவு செய்ய வேண்டும் (நாற்று உற்பத்தி செய்தும் நடலாம்). அரை ஏக்கருக்கு 250 கிலோ விதை தேவைப்படும். அறுவடைக்குப் பிறகு 60 நாட்கள் இருப்பு வைக்கப்பட்ட, நேர்த்தி செய்யப்பட்ட விதை வெங்காயம் விவசாயிகளிடமே கிடைக்கும்.

தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு ஒரு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பத்து நாளைக்கு ஒருமுறை பாசன நீரில் 200 லிட்டர் ஜீவாமிர்தம் கொடுக்க வேண்டும். அதைத்தவிர, வேறு எந்த இடுபொருளும் தேவையில்லை. 15, 30, 45-ம் நாட்களில் களை எடுக்க வேண்டும். ஜீவாமிர்தம் தொடர்ந்து கொடுத்துவந்தால், பயிர் நன்றாக பச்சை பிடித்து, 45 நாட்களுக்குப் பிறகு காய் பெருக்கத் தொடங்கும். பச்சை பிடித்து நிற்கும் தாள்கள் வெளுத்துப் போய் கீழே சாயும் சமயத்தில் (55-60 நாட்கள்) அறுவடையை ஆரம்பிக்கலாம்.
""வெங்காயம் சீக்கிரமா அழுகிப் போற பொருள். அதனால, பட்டுனு விதைச்சோம், சட்டுனு அறுத்தோம்னு வித்துடணும். அதுலயும் ரசாயனம் போட்டு வளர்த்த வெங்காயமாக இருந்தா 10 நாள்ல கெட்டுப் போயிடும். பட்டறையெல்லாம் போட்டு பாதுகாப்பு பண்ணித்தான் விக்க முடியும். ஆனா, ஜீரோ  பட்ஜெட்ல விளைஞ்ச வெங்காயத்தை பட்டறை போடாம வெச்சுருந்தாலும், மூணு மாசம் வரைக்கும் அழுகாது. அதனால்தான் அறுவடை செஞ்ச வெங்காயத்தை ஒட்டுமொத்தமாக விக்காம, தினமும் கொஞ்சம் கொஞ்சமா கொண்டு போயி உழவர் சந்தையில விக்க முடியுது. இன்னிய தேதியில் கிலோ 14 ரூபாய்னு விலை போயிக்கிட்டிருக்கு. நான் மாசிப்பட்டத்துல போட்டிருந்தேன்.

பொதுவா வெங்காயத்துக்கு ஏத்தது வைகாசி, கார்த்திகைப் பட்டங்கதான். சிலுசிலுனு வீசுற ஈரக்காத்து, மிதமான தட்பவெப்பம் அப்பப்ப கிடைக்கிற சாரல் மழை எல்லாம் ஒண்ணா சேர்ந்து கிடைக்கும். அதுலயே பயிர் நல்லா வளர்ந்து அதிக மகசூல் கொடுக்கும். மாசிப்பட்டத்துல போட்டதும்கூட மகசூல் குறைஞ்சதுக்குக் காரணம். இப்ப வைகாசிப் பட்டத்திலயும் நடவு செய்யப்போறோம். நிச்சயமா கூடுதல் மகசூலை அள்ளப்போறோம்" என்று நம்பிக்கையுடன் சொன்னார்.

**எம்.அகமது கபீர், வேளாண்மை நிபுணர், 93607 48542.**

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2010,00:00 IST

**தரைப்பகுதியில் ஏல விவசாயம்:** பசுமை சூழ்ந்த மேற்கு தொடர்ச்சி மலைகளுக்கு மட்டுமே சொந்தமாகிப்போன ஏலக்காய் இப்பொழுது மலையைவிட்டு தரைக்காட்டிலும் காய்க்கத் தொடங்கிவிட்டது.
கேரளத்திலுள்ள எர்ணாகுளம் மாவட்டம் காக்கூர் என்னும் இடத்தில் காஞ்சிராப்பள்ளி மனை என்னும் முகவரியில் வசிக்கும் நாராயணன் நம்பூதிரி மற்றும் பரமேஸ்வரன் நம்பூதிரி ஆகிய இருவரும் ஒரு ஆய்வு நோக்கத்தில் மலபார் ரக ஏல நாற்றுகளை ஸ்பைசஸ் போர்டின் நாற்று பண்ணையில் பெற்று தங்களின் வீட்டுத் தோட்டத்தில் நட்டு பராமரித்து வந்துள்ளனர். இரண்டு வருடங்களுக்குப் பின் இந்த தாய்ச்செடிகளில்இருந்து 40 தூர்களைத் தோண்டி அத்தோட்டத்திலுள்ள மா, பலா மற்றும் அஞ்சலி மரங்களின் அடியில் நட்டுள்ளார். 8 அடி இடைவெளியில் நடவு, மீண்டும் முதல் 35 தூர்கள் விட்டு செழித்து வளர்ந்திருந்தது. எவ்விதமான கவனிப்புமின்றி தானே வளர்ந்த ஏலச்செடிகள் இரண்டாமாண்டின் இறுதியில் பலன்தரத் தொடங்கின. நட்ட சமயத்தில் சாணி உரம் மற்றும் மக்கிய உரங்கள் மட்டுமே போடப்பட்டது. கோடை காலத்தில் மட்டும் நீர்ப்பாசனம் செய்து தரப்பட்டது. இதோ இன்று ஒவ்வொரு செடியும் 20 முதல் 22 வல்லிகளுடன் சராசரியாக 200 பழங்களுடன் காய்த்திருக்கின்றன. சிறிய வடிவிலான பழங்கள் 10-11 விதைகள் காணப்படுகின்றன. உலர்த்தியபோது 250 முதல் 300 கிராம் ஏலக்காய் கிடைத்துள்ளது. ஒரு குடும்பத்துக்குத் தேவையான ஏலக்காய் போதுமானது தரைப்பகுதியில் கிடைக்கின்றது. (தகவல்: ஜோன்சி மணித்தோட்டம், முதுநிலைக் கள அதிகாரி, ஸ்பைசஸ் போர்டு, சாந்தன்பாறை)

**ஒப்பந்த அடிப்படையில் பால் காளான் வளர்ப்பு:** காளான் வளர்ப்பிற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு அனைத்து விசேஷங்களுக்கும் பால்காளான் கிடைக்கும். பண்ணையில் நேரடி விற்பனை செய்யப்படுகிறது. துல்லிய தொழில்நுட்ப முறையில் பால்காளான் வளர்ப்புக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்: 90955 55677, 97505 55677, டெய்லி மஷ்ரூம்ஸ்.

**சோலார் மின்வேலி - ஹைடெக் ஐபெக்ஸ்:** ஆடு மாடுகள் மற்றும் காட்டு விலங்குகளிடமிருந்து விவசாய நிலங்களைப் பாதுகாக்க சோலார் மின்வேலி அமைப்பது சிறந்தது. தொடர்புக்கு ஹைடெக் சோலார் சிஸ்டம்ஸ், 235, காமராஜர் சாலை, சப் ரெஜிஸ்டிரார் அலுவலக மாடியில், உப்பிலிபாளையம் போஸ்ட், கோயம்புத்தூர்-641 015. 0422-645 1890, மதுரை, திருச்சி,

தஞ்சாவூர்- 98422 68770, திண்டுக்கல்,  தேனி- 98949 66655; சேலம், தர்மபுரி, நாமக்கல் - 94425 48770; கோவை, ஈரோடு- 98422 38770; சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர்- 98422 48770.

**நவீனதொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2010,00:00 IST



**சிப்பிக்காளான் - பூச்சி, நோய் நிர்வாகம்**

சிப்பிக்காளான் படுக்கைகளில் பச்சைப்பூசணம், பாக்டீரியா அழுகல் நோய் ஆகியவை அதிக ஈரப்பதத்தின் காரணமாக தோன்றுகின்றன. தவிர போரிட் ஈ, சியரிட் ஈ, ஸ்பிரிங்டெயில் பூச்சிகளும் தோன்றி காளான் படுக்கைகளில் முட்டைகளை இடுகின்றன.

ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுப்பாடு முறைகளை கடைபிடிப்பது இன்றியமையாததாகிறது.

* காளான் படுக்கைகளைத் தயார் செய்ய நோய்கள், பூச்சிகள் தாக்காத வைக்கோலைப் பயன்படுத்த வேண்டும்.

* ஊறவைத்தபின் தொற்று நீக்கம் செய்யப்பட்ட வைக்கோல்களைப் படுக்கைகள் தயார் செய்ய பயன்படுத்துகிறோம். அவ்வாறு பயன்படுத்தும்போது வைக்கோலின் ஈரப்பதம் 60 முதல் 65 சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது.

* வைக்கோலை உலர வைக்கும்போது மாலத்தியான் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மிலி என்ற அளவில் கலந்து தெளிப்பான் மூலம் ஈக்கள் வைக்கோலில் முட்டையிடுவதைத் தவிர்க்கலாம்.

* காளான் வளர்ப்புக் குடிலில் உள்ள சன்னல் கதவுகளுக்கு நைலான் வலைகள் பொருத்த வேண்டும். இதன்மூலம் ஈக்கள், வண்டுகள், காளான் குடிலுக்குள் வருவது தடுக்கப்படுகிறது.

* காளான் படுக்கைகளில் ஈரப்பதத்தைக் காக்க காலை, மாலை வேளைகளில் நீர் தெளிக்கும்போது காளான் படுக்கையில் நீர் தேங்கினால் காளான் அழுகிவிடும். நீர் தெளிப்பதற்கு சிறு தெளிப்பான்களைப் பயன்படுத்துவது அவசியம்.

* நல்ல தரமான பூசண நோய்களால் பாதிக்கப்படாத காளான் வித்துக்களை மட்டும் காளான் படுக்கைகள் தயார் செய்ய பயன்படுத்த வேண்டும்.

* பாக்டீரியா அழுகல் நோயைத் தடுக்க பிளீச்சிங் பவுடரை ஒரு லிட்டர்  நீருக்கு 2 கிராம் என்ற விகிதத்தில் கலந்து படுக்கைகள் மீது தெளிக்க வேண்டும்.

* கிளைப்பூசணங்கள் தோன்றிய படுக்கைகளை உடனடியாகக் காளான் குடிலில் இருந்து அகற்றி

அழித்துவிட வேண்டும்.

* காளான் குடிலின் அருகில் குப்பைக்குழிகள் அமைப்பதைத் தவிர்க்க வேண்டும். களைப்பூசணம், பாக்டீரியா அழுகல் நோய், போரிட் ஈ ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட காளான் படுக்கைகளை பெரிய குழிதோண்டி புதைத்துவிட வேண்டும். குழிகளின் மேற்பகுதியில் எண்டோசல்பான் மருந்தை லிட்டருக்கு ஒரு மில்லி என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும்.

* காளான் குடில்களை அறுவடை முடிந்தபிறகு 45 நாட்களுக்கு ஒரு முறை தொற்றுநீக்கம் செய்வது அவசியம். இதற்கு பார்மலின் பொட்டாசியம் பெர்மாங்கனேட் மருந்துகளை 2:1 என்ற விகிதத்தில் கலந்து குடில்களில் வைத்தபின் இரண்டு நாட்களுக்கு குடிலைத் திறக்கவோ, உள்ளே செல்லவோ கூடாது. குடிலின் சன்னல்களும் நன்றாக மூடப்பட்டிருக்க வேண்டும். (தகவல்: சே.கோபாலகிருஷ்ணன், வீ.வள்ளுவபாரிதாசன், வே.பிரகாசம், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003).

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## ***நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்யாததால் சிறுவாணிஅணையில் நீர் மட்டம் உயரவில்லை***

*கோவை,நவ.18–*

*கோவை மற்றும் சுற்றுப்புறங்களில் மழை பெய்த போதிலும் சிறுவாணி அணையின் நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்யாததால் நீர் மட்டம் உயரவில்லை.*

*தென்மேற்கு பருவமழை பொய்த்தது*

*கோவைக்கு குடிநீர் சப்ளை செய்யும் சிறுவாணி அணையிலிருந்து கோவை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளுக்கு தினமும் 8 கோடியே 90 லட்சம் லிட்டர் (89 எம்.எல்.டி.) தண்ணீர் வினியோகிக்கப்படுகிறது. சிறுவாணி அணை கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் ஆகிய 3 மாதங்களில் தொடர்ந்து நிரம்பி வழிந்தது. கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை மட்டுமல்லாமல் வடகிழக்கு பருவமழையின் போதும் அதிக அளவு மழை பெய்ததால் சிறுவாணி அணை தொடர்ந்து நிரம்பியது. ஆனால் இந்த ஆண்டு நிலைமை நேர்மாறாக உள்ளது. தென்மேற்கு பருவமழையின் மூலம் சிறுவாணி அணைக்கு போதிய மழை கிடைக்கவில்லை. இதன் காரணமாக சிறுவாணி அணை குடிநீர் வினியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டது. கடந்த ஆண்டை ஒப்பிடும்போது இந்த ஆண்டு கோவை மாவட்டத்திற்கு தென்மேற்கு பருவமழை மூலம் கிடைக்கும் மழை அளவு சராசரியாக குறைந்துள்ளதாக விவசாயத் துறையினர் தெரிவித்தனர்.*

*சிறுவாணி அணையில் மழை இல்லை*

*இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை கடந்த சில நாட்களுக்கு முன்பு தொடங்கியது. இதன்மூலம் கோவைக்கு போதிய மழை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி கோவை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் கடந்த சில நாட்களாக*

*தொடர்ந்து மழை பெய்து வருகிறது. ஆனால் சிறுவாணி அணையின் நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்யவில்லை.*
*சிறுவாணி அணையின் நீர் மட்டம் கடந்த 15–ந் தேதி 874.22 மீட்டராகவும், 16–ந் தேதி 874.25 மீட்டராகவும், நேற்று 874.30 மீட்டராகவும் இருந்தது. அணையின் நீர்பிடிப்பு பகுதியில் சாரல் மட்டுமே இருப்பதால் அங்கு குறிப்பிட்ட அளவு மழை பெய்யவில்லை. இதனால் அணையின் நீர்மட்டம் உயராமல் உள்ளது. வடகிழக்கு பருவமழையின் மூலம் சிறுவாணி அணையில் மழை பெய்தால் தான் அணையின் நீர்மட்டம் உயரும். அணையின் மொத்த கொள்ளளவு 878.50 மீட்டராகும்.*

## *4 நட்சத்திர பம்புசெட்டுகளுக்கு மட்டுமே இலவச மின்சாரம்: சிறுதொழில் நிறுவனங்களின் உற்பத்தி 50 சதவீதம் பாதிப்பு கோவையில் நாளை ஆர்ப்பாட்டம் நடத்த கோப்மா முடிவு*

*கோவை,நவ.18–*
*4 நட்சத்திர பம்புசெட்டுகளுக்கு மட்டுமே இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சார வாரியம் அறிவித்து உள்ளது. இந்த அறிவிப்பால் 4 நட்சத்திரம் இல்லாமல், ஐ.எஸ்.ஐ. தரத்துடன் கூடிய பம்புசெட்டுகளை தயாரிக்கும் கோவை சிறுதொழில் நிறுவனங்களின் உற்பத்தி 50 சதவீதம் பாதிப்படைந்து உள்ளது. இதனால் கோவையில் நாளை ஆர்ப்பாட்டம் நடத்த கோப்மா முடிவு செய்து உள்ளது.*
*விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்*
*இது தொடர்பாக கோப்மா(கோவை பம்ப் மற்றும் உதிரிப்பாகங்கள் தயாரிப்பு ) சங்க தலைவர் மணிராஜ் கோவையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–*
*தமிழ்நாட்டில் உள்ள 2 லட்சம் விவசாயிகளுக்கு புதிதாக இலவச மின்சாரம் அளிக்கப்பட உள்ளது. இந்த இலவச மின்சாரத்தை பெறும் விவசாயிகள் 4 நட்சத்திர முத்திரை கொண்ட பம்புசெட்டுகளைதான் வைத்திருக்க வேண்டும் என்று மின்சார வாரியம் புதிய சட்டம் ஒன்றை கொண்டு வந்துள்ளது. இதனால் பெரிய நிறுவனங்களில் ரூ.40 ஆயிரத்துக்கு விற்கப்படும் பம்பு செட்டுகளையே விவசாயிகள் வாங்கி வருகிறார்கள்.*
*இதனால் கோவையில் உள்ள சிறுதொழில் நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. ஏனெனில் கோவையில் தயாரிக்கப்படும் பம்புசெட்டுகள் ஐ.எஸ்.ஐ. தரச்சான்று பெற்றவை. இதன்விலை ரூ.15 ஆயிரம் ஆகும். லட்சக்கணக்கில் செலவழித்து நட்சத்திர அந்தஸ்து பெறுவது என்பது சிறு தொழில் நிறுவனங்களுக்கு முடியாத ஒன்று. தற்போது 4 நட்சத்திர பம்புசெட்டுகளுக்கு தான் இலவச மின்சாரம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளதால் சிறுதொழில் நிறுவனங்களில் தயாரிக்கப்படும் பம்புசெட்டுகளை வாங்க விவசாயிகள் முன்வருவதில்லை. இதனால் 50 சதவீத தொழில் வளர்ச்சி பாதிப்படைந்து உள்ளது.*
*நாளை ஆர்ப்பாட்டம்*
*பம்புசெட் உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் கோவையில் உள்ள 500–க்கும் மேற்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். இதனால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்துக்கு 4 நட்சத்திர பம்புசெட்டுகள் தேவை என்ற முடிவுக்கு எதிர்ப்பு*

தெரிவித்தும், எந்தவித நிபந்தனையும் இன்றி புதிய சட்டங்கள் கொண்டு வராமல் ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்ற பம்புசெட்டுகளை சப்ளை செய்ய அனுமதிக்க கோரியும் நாளை(வெள்ளிக்கிழமை) காலை கோவை காந்திபுரம் மத்திய பஸ் நிலையம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடத்த கோப்மா திட்டமிட்டு உள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொள்கிறார்கள். இவ்வாறு மணிராஜ் கூறினார். பேட்டியின் போது சங்க செயலாளர் ஆண்ட்ரூ திலக், பொருளாளர் சுதன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## குன்னூர் டீசர்வ் ஏலத்தில் 90 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர், நவ.18–

குன்னூரில் உள்ள டீசர்வ் ஏல மையத்தில் 90 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

கூட்டுறவு தொழிற்சாலைகள்

நீலகிரி மாவட்டத்தில் 14 கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் உள்ளன. இந்த தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூர் இன்கோசர்வ் வளா கத்தில் உள்ள டீசர்வ் ஏல மையத் துக்கு கொண்டு வரப்படுகிறது.

வாரந்தோறும் புதன்கிழமை இந்த ஏல மையத்தில் ஏலம் நடத்தப்படுகிறது. நேற்று பக்ரீத் பண்டிகை விடுமுறை என்பதால், நேற்று முன்தினம் ஏலம் நடைபெற்றது.

ஏலத்துக்கு மொத்தம் 4 லட்சத்து 32 ஆயிரத்து 686 கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 2 லட்சத்து 34 ஆயிரத்து 757 கிலோ இலை ரகமாகவும், 1 லட்சத்து 97 ஆயிரத்து 925 கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

90 சதவீதம் விற்பனை

ஒரு சில காரணங்களுக்காக ஏலம் மாலை வரை சுறு சுறுப்பாக நடைபெற்றது. ஏலத்தில் வர்த்தகர்கள் இடையே தேயிலை தூளை ஏலம் எடுக்க போட்டி நிலவியது. இதனால் மோட்டா ரக தேயிலை தூளுக்கு ரூ.2 முதல் ரூ.3 வரையிலும், சன்னரக தேயிலைதூளுக்கு ரூ.4 முதல் ரூ.6 வரையிலும் விலை உயர்வு ஏற்பட்டது. தேயிலை தூளுக்கு போட்டி இருந்ததால் 90 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. தேயிலை தூளின் சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை ரூ.45–ல் இருந்து ரூ.50 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.58–ல் இருந்து ரூ.62 வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.57 முதல் ரூ.60 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.65 முதல் ரூ.70 வரையிலும் ஏலம் சென் றது. அடுத்த ஏலம் வருகிற 24–ந் தேதி நடக்கிறது.

## குன்னூர் பகுதியில் தொடர் மழையினால் காய்கறிகள் அழுகும் அபாயம்

குன்னூர், நவ.18–

தொடர் மழையினால் குன்னூர் பகுதியில் காய் கறிகள் அழுகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

காய்கறி விவசாயம்

*குன்னூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பெரும்பாலும் சிறுவிவசாயி கள் தேயிலை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். பேரட்டி, பாய்ஸ்கம்பெனி, எடப்பள்ளி, இளித்தொரை, பெட்டட்டி போன்ற பகுதிகளில் ஆங் காங்கே காய்கறி விவசாயம் நடைபெற்று வருகிறது.*

*குறிப்பாக கேத்தி மற்றும் கேத்தி பாலாடா ஆகிய பகுதி களில் காய்கறி சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இந்த பகுதியில் காய்கறி பயிர்களுக்கு தேவை யான பாசன வசதி உள்ளதால், காய்கறி விவசாயத்தில் அதிக மான விவசாயிகள் ஈடுபட்டுள் ளனர். காய்கறி பயிர்களான உருளைக்கிழங்கு, பீன்ஸ், கேரட், முட்டைகோஸ், பீட்ரூட் போன்ற பயிர்களுடன் ஒரு சில பகுதிகளில் பூண்டு விளைவிக்கப்படுகிறது. தற்போது காய்கறிகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. இருப்பினும் இந்த சீசனில் பீன்ஸ் மகசூல் குறைவாக உள்ளது.*

*கடந்த ஒரு மாத காலமாக குன்னூர் பகுதியில் பலத்த மழையும், மிதமான மழையும் விட்டு, விட்டு பெய்து வருகிறது. மழை மற்றும் மேக மூட்டத்தின் காரணமாக காய்கறிகளின் மகசூல் குறைவாக உள்ளது. குன்னூர் பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் காய்கறி பயிரிடப்பட்டுள்ள நிலங்களில் தண்ணீர் தேங்கும் நிலை உள்ளது.*

*அழுகும் அபாயம்*

*தமிழகத்தில் மேலும் மழை நீடிக்க வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் நாட்களில் தொடர்ந்து மழை பெய்தால், காய்கறி விவசாயம் செய்யப்பட்டு உள்ள நிலப்பரப்பில் மழை தண்ணீர் தேங்கி, காய்கறி பயிர்கள் அழுகும் அபாயம் உள்ளது. மேலும் காய்கறிகளில் நோய் தாக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. மழை மற்றும் மேக மூட்டத்தின் காரணமாக தேயிலை மகசூலும் பாதிக் கப்பட்டுள்ளது. பச்சை தேயிலை கொழுந்துகள் வளர முடியாமல், வஞ்சி கொழுந்துகளாக மாறி உள்ளன. இத னால் பறிக்கப்படும் பச்சை தேயிலையின் எடையில் குறைவு ஏற்பட்டு வருகிறது. இதனால் விவசாயி கள் பாதிக்கப்பட் டுள்ளனர்.*

*மழை அளவு*

*குன்னூர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு மிதமான மற்றும் பலத்த மழை பெய்தது. குன்னூரில் 12.6 மி.மீ. மழையும், பர்லியாரில் 19 மி.மீ. மழையும், கேத்தியில் 12 மி.மீ. மழையும் பதிவாகி இருந்தது.*

## விவசாயிகள் 'கள்' விற்க அரசிடம் அனுமதி பெற்றுத்தரவேண்டும் தென்னை நலவாரியத்தலைவருக்கு கோரிக்கை மனு

*சோமனூர்,நவ.18–*

*விவசாயிகள் 'கள்' இறக்கி விற்பனை செய்ய, அரசிடம் அனுமதி பெற்றுத்தரவேண்டும், என்று, தென்னை நல வாரிய தலைவருக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்து இருக்கிறார்கள்.*

*'கள்' இறக்க அனுமதி வேண்டும்*

*கோவை மாவட்ட கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கத்தலைவர் ஏ.கே. சண்முகம், தென்னை நலவாரிய தலைவர் ராஜ்குமார் மன்றாடியாரை சந்தித்து ஒரு கோரிக்கை மனு கொடுத்தார்.*

*அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது:–*

*தமிழக அரசு தென்னை மரத்தில் இருந்து விவசாயிகள் 'கள்' இறக்குவதற்கு தடை*

விதித்து உள்ளது. முழுமையான மது விலக்கு வரும் வரை, விவசாயிகள் ‘கள்’ இறக்கி விற்பனை செய்வதற்கு மாநில அரசிடம் அனுமதி பெற்று கொடுக்க வேண்டும்.


தேங்காய் விலை உயர நடவடிக்கை

விவசாய தொழிலாளர்களின் கூலி உயர்வு காரணமாகவும், ஆட்கள் பற்றாக்குறையாலும், விவசாயிகள் பெருமளவு தென்னை விவசாயம் செய்து வருகிறார்கள். தற்போது தேங்காய் உற்பத்தி தேவைக்கு அதிகமாக இருக்கிறது. ஆனால் கடந்த 20 ஆண்டுகளாக தேங்காய் விலை உயரவில்லை. எனவே தேங்காய் மற்றும் இளநீர் ஆகியவற்றின் பயன்களை மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரம் செய்ய அரசுக்கு எடுத்து சொல்லி, தேங்காய் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் ஏ.கே. சண்முகம் கூறியிருக்கிறார்.

# வேளாண்மை செய்திகள்

# நுரையீரல்-சர்க்கரை நோய்களை குணப்படுத்தும் ‘வெற்றிலை’



வெற்றிலை மலேசியாவில் தோன்றி இந்தியா, இலங்கை, இந்தோனேசியா போன்ற நாடுகளில் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது.

வெற்றிலை மக்களின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தோடு இணைந்து விட்டது. கடவுள் வழிபாடு, திருமணம் உள்ளிட்ட பல்வேறு விசேச நிகழ்ச்சிகளில் முக்கிய பொருளாக வெற்றிலை கருதப்படுகிறது.

### வெற்றிலை ஒரு கற்ப மூலிகை

பல்வேறு பெருமைகளை கொண்ட வெற்றிலை பல்வேறு நோய்களை குணப்படுத்தும் மூலிகை மருந்தாக பயன்பட்டு வருகிறது. நரை, மூப்பு, சாக்காடு ஆகியவற்றை தடுத்து உடலை நோயின்றி பாதுகாப்பது தான் கற்ப மூலிகை. அப்படிப்பட்ட கற்ப மூலிகைகளில் வெற்றிலையும் ஒன்று. இது மருத்துவ மூலிகையாக இருப்பதால்தான் நம்முடைய முன்னோர்கள் வெற்றிலை போடும் பழக்கத்தை ஏற்படுத்தி கொண்டார்கள்.

வெற்றிலையில் 84 சதவீதம் நீர்ச்சத்து, 3 சதவீத புரதச்சத்து, 0.89 கொழுப்பு சத்து ஆகியவை உள்ளன. மேலும், கால்சியம், கரோட்டின், தயமின், வைட்டமின்-சி, கலோரி ஆகியவை உள்ளன. இவை நம்முடைய உடலில் ஏற்படும் பல்வேறு நோய்களை குணப்படுத்தும் ஆற்றல் உள்ளன. இதில் சவிக்கால் என்ற நோய் எதிர்ப்பு சக்தி உள்ளதாக ஆய்வுகள் தெரிவித்து உள்ளன.

### நோய் தீர்க்கும் மருந்து

வெற்றிலை சாறு 5 மில்லி, இஞ்சிசாறு 5 மில்லி என தினமும் சாப்பிட்டு வர நுரையீரல் சம்பந்தமான நோய்கள் வராது. 2 தேக்கரண்டி சீரகத்தை வெண்ணையுடன் கலந்து நன்றாக அரைத்து வெற்றிலையின் பின்புறம் தடவி நன்றாக கொதிக்க வைத்து குடிக்க தீராத வயிற்று வலி தீரும், 4 வெற்றிலை, வேப்பிலை ஒரு கைப்பிடி, அருகம்புல் ஆகியவற்றை சிறிதாக நறுக்கி கொதிக்க வைத்து குடிக்க சர்க்கரையின் அளவு குறையும்.

வெற்றிலையை நன்றாக மென்று சாப்பிட்டு வர வயிற்று புண், மலச்சிக்கல், பசியின்மை போன்ற பிரச்சினைகள் தீரும். வெற்றிலைச்சாறு, மிளகு ஆகியவற்றை சாப்பிட விஷக்கடி முறியும். வெற்றிலைச்சாறு, கோரோசனை சாப்பிட தொண்டையில் சளிக்கட்டு, இருமல், மூச்சுத்திணறல் குணமாகும்.

### சாகுபடி முறைகள்

100 மில்லி தேங்காய் எண்ணெயில் 5 வெற்றிலை போட்டு சிவப்பாக வரும்வரை சூடாக்கி வடிக்கட்டி வைத்துக்கொண்டு சொறி, சிரங்கு, படை மீது தடவி வர விரைவில் குணமாகும். தீப்புண் மீது வெற்றிலையை வைத்து கட்ட குணமாகும். வெற்றிலைச் சாறு பிழிந்து தேனில் கலந்து சாப்பிட்டு வர நரம்புகள் பலப்படும்.

நோய்களை குணப்படுத்தும் வெற்றிலை இந்தியாவில் காவேரி கரையோரங்கள், நாமக்கல் மாவட்ட பரமத்தி வேலூர், கரூர், திருச்சி மாவட்டம் தொட்டியம் ஆகிய பகுதிகளில் பணப்பயிராக அதிக அளவில் பயிரிடப்படுகிறது. வடிகால் வசதியுடைய எந்த மண்ணிலும் வெற்றிலை பயிரிடலாம். நிலத்தை நன்றாக கொத்தி 1½ மீட்டர் இடைவெளியில் 3½ அடிக்கு பார் அமைக்க வேண்டும். பாரின் இரு ஓரங்களிலும் அகத்தி, முருங்கை, செம்பை மர விதைகளை நடவு செய்ய வேண்டும்.

### நடவு செய்வது எப்படி?

விதைகளை நடவு செய்த 40-வது நாளில் வெற்றிலை கொடிகளை 300 கிராம் சூடோமோனால், அசோஸ்பைரியம், பாஸ்போ பேக்டீரியா ஆகியவற்றை சாண நீரில் கலந்து கொடிகளை நனைத்து நடவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு 1000 வெற்றிலை கொடிக்கால்கள் தேவைப்படும். கோடைகாலங்களில் தினமும் தண்ணீர் தெளித்து, 4 நாட்களுக்கு ஒருமுறை நீர்பாய்ச்ச வேண்டும்.

கொடி வளர ஆரம்பித்தவுடன் ஏற்கனவே நடவு செய்த அகத்தி, முருங்கை, செம்பை மரங்களுடன் வெற்றிலை கொடிகளை இணைத்து கட்ட வேண்டும். பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதிக அளவில் ஏற்படாது என்பதால் அதிக மகசூல் பெற்று விவசாயிகள் பயன் பெற முடியும்.

# நிலையான வருமானம் தரும் ‘மூங்கில்’



மூங்கில் ஒருவகை புல் தாவரம். இதில் 1,200 இனங்கள் இந்தியா, சீனா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, நேபாளம் போன்ற நாடுகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்தியாவில் வடகிழக்கு மாநிலங்கள், மேற்கு வங்காளம், ஒரிசா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவை 40 மீட்டருக்கு மேல் வளரும் தன்மை கொண்டது. கடல் மட்டத்தில் இருந்து 4 ஆயிரம் மீட்டர் உயரம் உள்ள பிரதேசங்களில் நன்றாக செழித்து வளரும்.

### மூங்கில்

மூங்கில் இனங்கள் காற்றில் உள்ள கார்பன்-டை-ஆக்சைடை அதிக அளவில் உறிஞ்சி, சுத்தமான ஆக்சிஜனை வெளியிடும் தன்மை கொண்டது. 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் மூங்கில் நெல் சமைத்து சாப்பிட மிகவும் சுவையானது. இதன் குருத்துக்களை பொரியல் செய்து சாப்பிடலாம். மூங்கில் வளர்ப்பவர்களுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. மூங்கிலின் பயன்பாடு அனைத்து நாடுகளிலும் அதிகரித்து வருகிறது. இதற்கு காரணம் மூங்கிலின் உறுதி தன்மையாகும்.

இந்தியாவில் மரக்கூழ் மற்றும் காகித தொழிற்சாலைகளில் 40 சதவீதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர வெப்பம் அதிகம் உள்ள இடங்களில் அமைந்துள்ள உயர்ரக மற்றும் நட்சத்திர ஹோட்டல்களை சுற்று அழகிய குடில்கள் அமைப்பதற்கும், அறைகளை அலங்கரிக்கும் கைவினை பொருட்கள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. சீனாவில் மூங்கில் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### நிலையான வருமானம்

பிரம்பு என்ற ஒரு ஒருவகை மூங்கில் வகையில் நாற்காலி, டேபிள், கட்டில், கூடைகள் தயாரிக்கப்படுகின்றன. இவை உறுதியானதாகவும், எடை குறைவாக உள்ளதாலும் நாம் செல்லும் இடங்களுக்கு எளிமையாக கொண்டு சென்று பயன்படுத்த முடியும். இதற்கு நல்ல விலையும் கிடைக்கிறது. இதனால் மூங்கில் வளர்க்கும் விவசாயிகள் எல்லா காலத்திலும் ஒரு நிலையான வருமானத்தை பெற முடியும்.

# அதிக விளைச்சலுக்கு விதை பரிசோதனை அவசியம்

## விவசாயிகளுக்கு அதிகாரி ஆலோசனை

அதிக விளைச்சலுக்கு விதைக்கப்படும் விதை தரமானதாகவும், நல்ல முளைப்புத்திறன், புறத்தூய்மை, சரியான ஈரப்பதம் கொண்டதாக இருக்க வேண்டும்.

### பரிசோதனை

அப்போதுதான் பயிர்களுக்கு இடப்படும் இடுபொருள்களான உரம், பூச்சி மருந்து ஆகியவற்றின் செயல்பாடுகள் பயனுள்ளதாக இருக்கும். விவசாயத்தில் அதிக மகசூல்பெற சரியான பயிர் எண்ணிக்கை பராமரிப்பு அவசியம்.

ஒரு பயிரின் எண்ணிக்கை என்பது பயிரின் முளைப்புத்திறனை கொண்டே அமைகிறது.

தரமான பரிசோதனை செய்யப்படாத விதைகளை நடவு செய்தால் பயிர் எண்ணிக்கை குறைந்து நஷ்டத்தை ஏற்படுத்தி விடும். இந்த பிரச்சினையை தவிர்க்க விவசாயிகள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள விதைகளை கோவை தடாகம் ரோட்டில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

### விதைகள் மாதிரி

பரிசோதனைக்கு வரும் முன் இருப்பு வைத்துள்ள விதைகளில் குறிப்பிட்ட அளவு விதை மாதிரி எடுத்து பாலித்தீன் உறையிலிட்டு கொண்டு வர வேண்டும்.

இந்த தகவலை கோவை மாவட்ட விதை பரிசோதனை நிலைய அதிகாரி ஜவஹர் தெரிவித்து உள்ளார்.